உ

# யா/புற்றளை மகா வித்தியாலயம்

## க.பொ.த.உயர்தரம். இந்துநாகரிகம் - செயலட்டை – 04

## அலகு – சைவ சித்தாந்த சாஸ்திரங்கள்

### மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

01. சைவ சித்தாந்த தத்துவத்தை முற்று முழுதாக விளக்குவன
   1. ஆகமம் 2. வேதம் 3. சித்தாந்த சாஸ்திரங்கள்
   4. சிவஞான போதம் 5. திருவருட்பயன்

02. சைவசித்தாந்த சாஸ்திரங்களுள் காலத்தால் முற்பட்டவை
   1. சிவஞானபோதம், திருவருட்பயன்
   2. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்
   3. திருக்களிற்றுப்படியார், சிவஞானசித்தியார்
   4. சிவஞானபோதம், திருவுந்தியார்
   5. சிவஞானசித்தியார், சிவஞானபோதம்

03. மெய்கண்ட சாஸ்திரநூல்கள் எழுந்த காலம்
   1. கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்
   2. கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்
   3. கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்
   4. கி.மு. 12ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 14ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்
   5. கி.மு. 12ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்

04. சைவ சமயத்தின் வழியைக் குருசீட பரம்பரையில் விளக்கிக் கூறியவர்கள்
   1. சமய குரவர்கள் 2. பன்னிரு ஆழ்வார்கள் 3. சந்தான குரவர்கள்
   4. வேதகால ரிஷிகள் 5. வேதாந்திகள்

05. புறச் சந்தான பரம்பரையினர் இடம்பெறும் தொகுதி
   1. மெய்கண்டதேவர், திருநந்திதேவர், மறைஞானசம்பந்தர், சத்தியஞான தரிசினிகள்
   2. பரஞ்சோதிமுனிவர், அருணந்திசிவாச்சாரியார், மெய்கண்டதேவர், உமாபதிசிவாச்சாரியார்
   3. மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார், திருநந்திதேவர், சனற்குமாரர்
   4. மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், திருநந்திதேவர்
   5. மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார்

06. அகச் சந்தான பரம்பரையினர் அடங்கும் தொகுதி
   1. மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார்
   2. திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதிமுனிவர்
   3. மெய்கண்டதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதிமுனிவர்
   4. திருநந்திதேவர், மெய்கண்டதேவர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார்
   5. மெய்கண்டதேவர், திருநந்திதேவர், அருணந்திசிவாச்சாரியார்,மறைஞானசம்பந்தர்



Prepared by : Mrs. S. Suresh

VavaZICTEC

07. சித்தாந்த அட்டகத்தை அருளியவர்
    1. திருநந்திதேவர் 2. மெய்கண்டதேவர் 3. உமாபதிசிவாச்சாரியா்ர
    4. அருணந்திசிவாச்சாரியார் 5. மறைஞானசம்பந்தர்

08. திருவுந்தியாரில் உள்ளடங்கும் செய்யுள்களின் எண்ணிக்கை
    1. 20 2. 45 3. 100 4. 05 5. 65

09. திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர்
    1.மெய்கண்டதேவர் 2.திருக்கடவூர்உய்யவந்ததேவர் 3. திருவியலூர்உய்யவந்ததேவர்
    4. உமாபதிசிவாச்சாரியார் 5. மறைஞானசம்பந்தர்

10. சைவ சித்தாந்தத்தின் முதல் நூல்
    1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப்படியார் 3.சிவஞானசித்தியார்
    4. சிவஞானபோதம் 5. திருவருட்பயன்

11. சிவஞானபோதம் கொண்டுள்ள இயல்களின் எண்ணிக்கை
    1. 04 2. 03 3. 12 4. 06 5. 08

12. சிவஞானசித்தியாரின் சூத்திரங்களின் எண்ணிக்கை
    1. 14 2. 12 3. 10 4. 06 5. 04

13. சிவஞானசித்தியாரின் 4ஆம் சூத்திரம் கூறும் விடயம்
    1. புதி இலக்கணம் 2. பசுவுண்மைப் பிரமாணம் 3. பசு இலக்கணம்
    4. பாச இலக்கணம் 5. பதியுண்மைப் பிரமாணம்

14. உண்மை விளக்கத்தை எழுதியவர்
    1. உமாபதிசிவாச்சாரியார் 2. மனவாசகங்கடந்தார் 3. மெய்கண்டதேவர்
    4. அருணந்திசிவாச்சாரியார் 5. மறைஞானசம்பந்தர்

15. சித்தாந்த அட்டகத்துள் அடங்குபவை
    1. வினாவெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம்
    2. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், நெஞ்சுவிடுதூது, கொடிக்கவி
    3. சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாஇருப∴து, திருவருட்பயன்
    4. உண்மைவிளக்கம், வினாவெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது
    5. சங்கற்பநிராகரணம், போற்றிப∴றொடை, திருவுந்தியார்,திருக்களிற்றுப்படியார்

16. சிவஞானபோதத்தின் வழிநூலாக அமைவது
    1. திருவருட்பயன் 2. சிவப்பிரகாசம் 3. சிவஞானசித்தியார்
    4. கொடிக்கவி 5. உண்மைநெறிவிளக்கம்

17. நான்கு வெண்பாக்களால் ஆன மிகச் சிறிய நூல்
    1. உண்மைவிளக்கம் 2. வினாவெண்பா 3. கொடிக்கவி
    4. நெஞ்சுவிடுதூது 5. உண்மைநெறிவிளக்கம்

18. சிவப்பிரகாசத்தின் சாரமாக அமைந்த நூல்
    1. வினாவெண்பா 2. கொடிக்கவி 3. உண்மைவிளக்கம்
    4. திருவருட்பயன் 5. நெஞ்சுவிடுதூது





VaazICTEC

19. சிவஞானபோதத்திற்கு சார்பு நூலாக அமைவது
    1. கொடிக்கவி 2. சிவப்பிரகாசம் 3. திருவருட்பயன்
    4. இருபாஇருப.்.து 5. நெஞ்சுவிடுதூது

20. சிதம்பரத்தில் திருவாதிரை விழாவுக்காக ஏறாது நின்ற கொடியை ஏற்றுவதற்காகப் பாடப்பட்டது
    1. உண்மைநெறிவிளக்கம் 2. திருவருட்பயன் 3.கொடிக்கவி
    4. நெஞ்சுவிடுதூது 5. சங்கற்பநிராகரணம்

21. திருவருட்பயனின் மூன்றாம் அதிகாரமாக அமைவது
    1. உயிரவை நிலை 2. பதிமுதுநிலை 3. இருண்மலநிலை
    4. அருளுரு நிலை 5. அருளதுநிலை

22. திருவருட்பயனில் இடம்பெறும் குறட்பாக்களின் எண்ணிக்கை
    1. 10 2. 25 3. 30 4. 100 5. 05

23. உண்மைவிளக்கம் கொண்டுள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை
    1. 53 2. 25 3. 40 4. 100 5. 10

24. திருவுந்தியாரை அருளியவர்
    1. மெய்கண்டதேவர் 2. திருநந்திதேவர் 3. திருக்கடவூர்உய்யவந்ததேவர்
    4. திருவியலூர்உய்யவந்ததேவர் 5. உமாபதிசிவாச்சாரியார்

25. 100 விருத்தப்பாக்களால் ஆன நூல்
    1. திருவருட்பயன் 2. சிவப்பிரகாசம் 3. கொடிக்கவி
    4. நெஞ்சுவிடுதூது 5. உண்மைநெறிவிளக்கம்

VadaZICTEC